உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

V. SUBRAHMANIYASAR
TAMIL UNIT

திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி,

திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி,

திருவாரூர் மருந்து வெண்பாமாலை.

இவை

திரிசிரபுரம், வித்துவசிரோமணியாகிய

ம-௱-௱-ஸ்ரீ,

சி - தியாகராஜசெட்டியா

ரவர்களால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம்

கவரன்மெண்டு காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே - சாமிநாதையரால்

சென்னை சூளை

தொண்டைமண்டலம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1888.

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி

காப்பு.

பூமேவு செம்பொற் பொதுவினடிக கும்பெருமான்
பாமேவந் தாதி பகரவே—நாமேவு
கற்பகத்தின் மேவி யமரு மொருகோட்டுக்
கற்பகத்தி னம்பொற் கழல்.

சமயாசாரியர்.

மாண்டபுகழ்க் காழி மறைக்குழவுஞ் சூலைகொடுந்
தாண்டவர சுப்ரவ லண்ணலு - நீண்ட
திருவாத வூர்வேதச் செம்மலுமெஞ் ஞான்று
மொருவாத வூரொன் னுளம்.

ஸ்ரீ க்ஷா குரு.

துன்னுபெருஞ் செல்வத் துறைசை கயிலையென
மன்னி யமருமெழின் மாணிக்க - மின்னுபுகழ்ப்
பீடார் குருசுப் பிரமணிய தேசிகன்சீர்
பாடாத நாத்தென் பயன்.

நூல்.

சீர்பூத்த வம்பலத்திற் றேவிமலர்க் கண்களிக்க
நாரபூத்த வின்ப நடநவிலுங் - கார்பூத்த
கண்டன் மறைச்சிலம்பு காட்டு மலர்ப்பாத
முண்டுதுணை நாயே னுயிர்க்கு. (௧)

உயிரோ யுயிர்த்துணையே யுண்ணாத தெவிட்டா
வயிரோதீங் கண்டே யமுதே - செயிரோ
மருவார்ச்செந் தேனேபோன் மன்றத்தி லாடு
மொருவாயான் றொண்ட னுனக்கு. (௨)

உனக்கடிமை யானென்று மோங்குதில்லை நமா
வெனக்கிறைநீ யென்று மிசைப்பேன் - மனக்கிசைய
உன்னை யடியே னொருநாண் மறப்பேனோ
வன்னையே யப்பா வருள (௩)

அருட்பிழம்பை யானந்த வாழ்வினையஞ் ஞான
விருட்பிழம்பைப் பாற்று மினனைத்-தெருட்பிழம்பை
யுற்றாரோ பற்றுமன்றத் தும்பா பெருமானை
மற்றாரோ பற்ற வலர். (௪)

வல்லார் முலைச்சசியோன் வாழ்வுமயன் மால்வாழ்வும
பல்லார் பணியம் பலக்கூத்த - னெல்லாா
மலரடியை வாழ்த்தி வணங்குபே ரன்ப
ரலாபெரிய வாழ்விற் கணு. (௫)

அணுமலை யாக வணுவாய மலையே
நணுமணு வாக நகமாய்ப - புணரவல

னேவனெழிற் பொன்மன்றத் தின்பநடஞ் செய்பெருமா
னேவனவ னும்பர்க் கிறை. (௬)

இறைவா வுவந்தேத்து மின்பவன்ப ருள்ளத்
துறைவாய்நீ யெல்லா முணர்வாய் - மறைவாழ்த்தும்
பொன்னம் பலவாநின் பூங்கழல்சேர் நாயேனுக்
கின்னம் பலவா விடர். (௭)

இடர்கெடுமா றெண்ணுதியே லென்னினிய நெஞ்சே
படர்சடைமேற் கங்கை பனிக்க - நடநவிலு
மம்பலத்தான் மேருவில்லாக் கம்பலத்தா னின்பாய
நம்பலத்தான் சீரோ நவில். (௮)

நவிலுமறைக கெட்டாத நல்லமணி நாவலா
கவிபுகலக கேட்டுக் களிக்குஞ் - சவிமணிசேர்
குன்றுப்போ லின்பங் கொடுக்குமணி செங்கனக
மன்றுடை யெங்கண் மணி. (௯)

மணிகண்டா வம்பல வாணா வருத்தும்
பிணிகண்டு நெஞ்சிரக்கம் பேணாய் - பணிகண்ட
பூணாய்பொன் மன்றுடையாய் புண்ணியா நீசற்றுக்
காணாய்நா யேன்மறைந்த கண். (௧௦)

கண்ணொளிமாய்த் தன்பர் கவிபுகலக் கேட்டடியேன்
கண்ணொளி மாய்க்கக் கருதினை- பண்ணொளிரப்
பாடவறி யேனம் பலவரதா நின்னடன
நாட வொளிர்கண் ணலம். (௧௧)

நலமொன் றுனககுரைப்பே னன்றுவே கேட்டி
பலமொன்று பேரம் பலவன் - வலமொன்று
சூலத்தான் மால்குருதி துன்னிநிறை யுங்கரக
பாலத்தான் பொன்னடியே பாடு. (கஉ)

பாடே னினியகவி பாடித் திருமுன்னின்
றாடேன் மலர்கொண் டருச்சியேன் - வீடுமறை
போற்றுகழல் சென்னி புனையேன்பொன் னம்பலவா
சாற்றடியே னுய்யுஞ் சரி. (கங)

சரிந்த பவளச் சடைதிசை யெல்லாம்
விரிந்தாட கங்கைதுளி வீசப் - புரிந்தநட
மன்றத்தான் முப்புரங்கண் மாயத் தவராம்பொற
குன்றத்தா னெங்கள்குணக் குன்று. (கச)

குன்றெடுத்தான் காணாத கோமான்பொற் குஞ்சிதத்தாள்
மன்றெடுத்து நின்றாடு மாதேவ - னென்று
மிறைவ னெளியேமுக கேத்துமறை தோறு
நிறைவன் பொருளாகி நின்று. (கரு)

நின்றேன் றிருமுன்னர் நின்று நெடுங்கருணைக்
குன்றே யெனவழைத்துக் கும்பிட்டேன் - மன்றேய்ந்த
வானந்தக் கூத்த னழியாத முத்திநல
மேனந்த நல்கா னெனக்கு. (கசு)

கும்பிடவே முத்திநலங் கூடு மெனமறைக
ளம்பிடவே சாற்றுகின்ற நன்மையினென் - கம்படுவெங்

தியெழுத்தை நீரெழுத்தாச் செய்பிரமா வோரைந்து
பாயெழுத்தான் சிற்றம் பலம். (கஎ)

சிற்றம் பலத்தாடுஞ் செல்வா சிறியேன்செய்
குற்றம் பொறுத்தாள்வாய் கோமானே - குற்றம்
பொறுப்பாயேற் பொல்லான் பொறுத்தானென் றுன்னை
யொறுப்பா ரெவரிங் குளர். (கஅ)

உள்ளமே நீகொ ளுறுதி யிதன்மேலென்
கள்ளமே யென்றுங் கலவாது - வெள்ளஞ்
சடையணிந்த வம்பலவன் றாட்கமலப் போதைத்
தொடையணிந்த பாவாற் றுதி. (க௯)

துதிப்போ மவன்புகழே சொல்வோமோ வாது
மதிப்போமெஞ் ஞான்று மறவோம் - கதிக்கே
புகவிடுமோ மன்றாடும் புண்ணியனெல் லோரும்
நகவிடுமோ நெஞ்சே நமை. (உ0)

நமர்கா ணமனுக்கெ னம்மிடத்து வேலை
யமரர்பணி தென்புலியூ ரத்தன் - நமரானோம்
அஞ்சா தடர்த்தா லறைவோ மயர்த்தனைகொ
லெஞ்சாதெண் மாணிசெய லென்று. (உக)

என்பரவம் பூண்ட விறையைப்பொன் னம்பலத்துத்
துன்பகலக் கண்டு தொழுதேத்து - மன்ப
ரடிப்பங் கயப்போதை யம்பொன் முடியா
முடிப்ப ரமரர் முடிக்கு. (உஉ)

முடியாப் பெருவாழ்வே முன்னவா வென்றும்
வடியாத வானந்த வாரி - கடியாரும்
பூங்கொன்றைத் தாமா புலியூராய் நாயேனைத்
தாங்கொன்றைத் தாநீ சரண். (உ௩)

சரமொன்று தொட்டுத் தழல்விழிக்கு நேராய்ப்
புரமொன்ற வெய்த்த புதல்வன் - றிறமொன்றக
காவானைக் காவென்றல் கைவிட்டுத் தென்புலியூர
மூவானை நன்னெஞ்சே முன்னு. (உ௪)

முன்னுவாய் நெஞ்சே முடிந்தபவ மெத்தனையோ
வின்னும் வருபவங்க ளெத்தனையோ - பொன்னம்
பலவனைக்கண் டேத்திப் பவந்தொலைத்தல் செய்யா
தலமருவா யென்னோ வறை. (உ௫)

அறைகூவி நின்றே யமருவர் தாண்ட
விறைவா பலவ ரிறந்தார் - நிறையோத
நஞ்சமுண்டுஞ் சாவாத நம்பனைப்பொன் னம்பலத்துத
தஞ்சமென நெஞ்சேநீ சார். (உ௬)

சாரும்பே ரின்பநலந் தாரணியீர் நும்மைவிட்டுப்
பேரும் பிறவிப் பெருந்துன்பம் - யாரு
மதிக்கும் பெருமான்செய் மாணிக்கக் கூத்தைத்
துதிக்கும்பொன் மன்றிற் றொழின். (உ௭)

தொழுதுந் துதித்துந் துகளிலன்பு தாவென்
றழுதுநினை யன்ப ரடைந்தார் - முழுது

மறமே புரிவேன் மறவிக்கென் சொல்லே
னறமே திகழ்புலியூ ராய். (௨௮)

ஆயேன்சி வாகமத்தை யாய்ந்தார் பணிபுரியேன்
பேயேனுப் தார்போற் பிதற்றுவேன் - றாயேனு
மல்லேனெவ் வாறுன்னை யாய்மலர்கொண் டர்ச்சிப்பே
னல்லாய்பொன் னம்பலவா நான். (௨௯)

நாவிருக்க நீயிருக்க நாமம் பலவிருக்கப்
பாவிருக்க நின்பெருஞ்சீர் பாடிடேன் - பூவிருக்குங்
கொன்றையாய் மன்றிடைநின் கூத்துந் தரிசியே
னென்றையா யானுய்கு வேன். (௩0)

ஏனோ பலபவமேற் றின்னு வுறல்வேண்டு
மானோவென் கண்ணுண் மகிழுவே - தேனோதா
னென்னும் பிரான்மன் றிடைச்செய் நடங்கண்டு
மன்னும்பே ரின்படையா மல். (௩௧)

மலநோய் துரக்கு மவிபவங்கண் மாற்றுங்
கலர்காணு தென்றுங் கரக்கு - மலரிமையக
குன்றின் முளைத்த கொடிபடர்ந்த வாமத்து
மன்றி னடிக்கு மருந்து. (௩௨)

மருந்தே பவப்பிணிக்கு மன்றத்தி லாடு
மருந்தத் தெவிட்டா வமுதே - பொருந்தார்
புரமெரித்த முக்கட் புனிதாநிற் பாட
வரமடியே னுக்கருளு வாய். (௩௩

வாரணிந்த கொங்கை மலைக்குமரி கண்டுவக்கச்
சீரணிந்த மன்றிற் றிருநடன - நீரணிந்த
பெம்மான் புரிவன் பெறும்பே றிதன்மேலெ
னம்மா கண் டேத்த லழகு. (௩௪)

அழுத மறைமழவிற் கம்மை முலைப்பால்
பழுதகல நந்தபைம்பொற் பாண்டங் - கழுவுபுனல்
உண்ணுந் தவமேனு முண்டோபொ னம்பலவா
வெண்ணுமடி யேனுக் கியம்பு. (௩௫)

இயலார்ந்த பல்புலவோ ரேத்துமிறை வாம்பெண்
பயலார்ந்த மேனிப் பரமா - மயலார்ந்தோர்
காணாத வம்பலவா கன்னெஞ்சே னன்பில்லே
னாண தடிமையென்பே னன். (௩௬)

நானே தவமுடையே னானே தவமுடையேன்
றேனே யமுதே செழும்பாகே - யானத
செல்வமே யென்றுகவி செப்பச்சிற் றம்பலத்தா
னலவரந்தந் தாண்டமையா னன்று. (௩௭)

நன்றே புலவீர் நலமிலாப் பேதையனாக
குன்றேய்ப் யாவென்று கூறுவீர - கொன்றைமலாந்
தாமத்தாய் தென்புலியூர்ச் சங்கரா வெற்பரசி
வாமத்தா யென்றன் மறந்து. (௩௮)

மறந்துவினை யன்றி வழுத்துமோ வென்று
விறந்து பிறப்பானா யென்றுஞ் - சிறந்ததே

மாங்கனியுண் வாயுணுமோ வன்காஞ் சிரங்காய்போ
னேங்கனிசர் மன்று யுவந்து. (௩௯)

உவந்துநினைப் பூசை யுஞற்ற லொழிந்தேன்
பவந்தொலையு மாறு படேன் - றவந்தானொரு
சிந்தியேன் றென்புலியூர்த் தேவாநின் சேவடிகள்
வந்தியே னுய்வேன்கொன் மற்று. (௪0)

மற்றென் னுறல்வேண்டும் வந்தித்தான முதநிலவு
சிற்றம் பலத்தாடுந் தேவபிரா - னுறறருளவ
னென்றால் விளையா ரெவரோ மடநெஞ்சே
சென்றாடல் கண்டுகதி சேர். (௪௧)

சேரார் பவப்பெருநோய் தீராரெவ் வாறநந்தா
வாராவே ரானந்த வாரிபுக - னீரார்ந்த
செஞ்சடையா னேரிருவா சேவிகக மனறாடு
மஞ்சுடைய தில்லை வனம். (௪௨)

வனமடைந்து புன்சருகு வன்காய் கிழங்குண்
டினனெதிர்நின் றோகா லெடுத்துங் - கனலிடையே
சோந்துந் தவஞ்செயலென் றில்லைமன்றி லெம்பெருமா
னார்ந்தநடங் காண லயர்ந்து. (௪௩)

அயில்வே லனுகரு மரிமதர்க்கட் பாவாய
மயிலேய்மென் சாயன் மடந்தாய் - குயிலேயின்
சொல்லா யெனபலகாற் சொல்லுமபொன் மன்றாடல்
வல்லா யெனிற்குறையென் வாய்க்கு. (௪௪)

வாய்மை யன்பு சற்றுமிலேன் வன்னெஞ்சப் பாறையிடைச்
சேய்மையின்றிப் பூத்துத் திகழுமோ - தூய்மைநிகழ்
குன்றாத பேரன்பர் கோதிலுள வாவிமலா
மன்றாடி பூந்தா மரை. (௪௫)

மறையெயினம் வான்பறந்தும் வனைநிமண் கீண்டும
பிறைமுடியுந் தாளுமப் பெறும - னிறைபெருநான்
பற்றாத சிற்றம் பலத்துளெங்க னின்றாடி
முற்றா முலையாய் மொழி. (௪௬)

மொழியத் தெவிட்டா முதல்வனின்சீர் முற்று
மொழியப் புகலவேனென் றன்னி - னிழிவுடைய
சிற்றெறும்பு வாரிமுற்றுஞ் சேரவுண்ண வுன்னுமே தா
சற்றுமைசிற் றம்பலநா தா. (௪௭)

தாமரைக்கண் குன்றொருவா தாளிட்டார் மற்றொருவா
மாமறைக்கண் கூம்கண்வைத் தாரிவரு - ளாமொருவா
பொன்னடிவைத் தாரொருவாப் போகினு யாழிகொடுத்த
தென்னவற மன்றுடையா யீது. (௪௮)

ஈதே கருணை யிறைவாபொன் னம்பலவா
தீதே தமியனனி செய்திடினும் - போதே
யனையனின்பொற பாத மடைந்தபின்னுந் தீய
வினையகற்றி யாளா விடின். (௪௯)

விட்டோம் பயனில்லா வீண ருறவெல்லாந்
தொட்டோமின் பஞ்செய்யுந் தொண்டுகளை - நட்டோமற

றெண்டா பெருங்குழைவைத் தாய நடராச
னண்டாதொழு மன்ற மடைந்து. (௫0)

அடைந்தா ரெவரேனு மானந்த வெள்ளங்
குடைந்தாட வம்பலத்துட் கும்பிட் - டடைந்தோரை
நமபிறவி யோட்டுமினை யென்று நவலுதல்போ
லம்பலத்தி லாடு மரன். (௫௧)

அரவமைந்த செஞ்சடையா னம்பலவ னென்னே
புரவமைந்த வள்ளன்மை பூண்டு - மிரவமைந்தே
பேற்றும் றலைக்கலங்கை யெண்ணென கரந்துசெய்போ
கூற்றுருளுண் ணுணங் கொள. (௫௨)

கொள்ளக் குறையாத கோதி லருட்கடலே
யெள்ளப் படாதபே ரின்பமே - வெள்ள
முடித்த சடைமுடியாய முன்னவா மன்றி
லாடித் தகழ ணேயேற்கு நல்கு. (௫௩)

நல்குவா யென்றுன்னை நம்பினே னன்பருளத்
தலந்தமிரு ளோட்டு மவிரொளியே - மல்குதிருச்
சிற்றம் பலவருள் செய்யாய் சிறியேன்செய்
குற்றங் குணமாகக் கொண்டு. (௫௪)

கொண்டேம்பொன் மன்றுடைய கூத்தன் கழல்சிரமேல்
விண்டோ நெடுந்துயர்செய் வெம்பிறவி - யண்டருளோ
ரம்பேறி யார்பெறுரா நாடித் துருவிடினும்
வம்பேறு கொன்றைமட வாய். (௫௫)

வாயார வாழ்த்துவார் மன்னுநடங் கும்பிடுவார்
தோயாவா நந்தத் துளைகுவா - ரோயாது
நின்றுருகு வாரைய நின்னன்பர் யானோபொன்
மன்றுபுக நின்றாண் மதித்து. (ருசா)

மதித்தவழுஞ் செஞ்சடையும் வானபுலவா பாடுந்
துதிதவழும் பூந்தாளுந் தோற்றிக - கதிதவழு
மம்பலத்தி னின்றாடு மப்ப னயன்றிருமால
வெம்பிவிண்மண் கீள விடுத்து. (ருஎ)

விடவரவஞ் சென்னி மிலைந்து புலியும்
படவரவுங் கண்டு பணிய - நடநவிலவோ
னம்பலங்கண் டேத்து மதுவே யறிஞரடை-
செம்பலன்வே றென்னெஞ்சே தேர். (ருஅ)

தேர்ந்துணர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வ ரொலாங்கூடி
வார்ந்தபுகழ் வாயார வாழ்த்திடவே - சோர்ந்துநின்றூண்
மன்றடைந்து கும்பிட்டு வாழ்வுறுவா யானைய
வென்றடைவே னின்று ளிணை. (ருசு)

இணையில்லா நின்னன்ப ரெய்தும் பெருவாழ்
வணையுமா றேயொண்ணி னைய - டணையிற
குரண்டம்வான் கங்கைநதி கூடநீனை யாதோ
வரண்டவாத் தென்புலியூ ராய். (சா0)

ஆயா மனையி லளைதிருடிக் கட்டுண்ட
மாயனபொன மன்ற மருவியுந் - தாயனையான்

னனைகரும் பிட்டின்பஞ் சாரா தினுந்துயில்வா
னென்ன புதுமை யிது. (சுக)

இதுவோ பெருமை யிரணியமன் றாடும்
விதுவேய் சடில விமலா - மதுவேயசின
பொனனிதழிப பூந்தாரா புரிநதருளாய செம்பவள
மனனிதழி யுய்யும் வணம். (சுஉ)

வண்ணங் கரிய மணிமிடற்றாய் தனபுறுவே
னெண்ணந் தெரியா திருக்கின்றாய - பண்ணைவயல்
ஆரமனறத் தாடு மரசே நினையெல்லா
மோராபெருமா னென்பதெவ்வா றோது (சுங)

ஓதா துணாந்த வொருவருண ஞானபபாற
கோதாரா மற்கொடுத்த கோமானே - தீதாரா
மன்றாடு மாமணியே மாணிக்க மேயடியேனா
குனறாநோய தீர்த்தடிமை கொள. (சுச)

கொண்டா லெனையடிமை கோபிபப ரோவடியார
தண்டா வருட்பெரிய சாகரமே - கண்டாா
பிரியாப்பொன் மன்றாடும் பெம்மானே தீராநோ
யெரியாய் வருத்து மெனை. (சுரு)

என்னைநின் னுள்ள மிரங்கா திருக்கின்றாப
பொனனே மணியே புகழமுதே - யின்னே
யெனைநோய்தீர்த் தாளின்மண் ணீசா நினகருப
பினைவேறுண் டோபெருஞ்சீ ரேசு. (சுசு)

பேசவே னின்பெருஞ்சீர் பேயேனை யாட்கொள்வாய்
கூசுவேன் மற்றையர்சீர் கூறவே - நேசமொடு
நம்பினரைக் கைவிடுத னல்லறமோ மன்றுடைய
எம்பெருமா னீசற் றிசை. (சுஎ)

இசையார்ந்த தென்றில்லை யீசாநின் னன்பா
நசையார்ந்த பாதக னவில்வார் - வசையார்ந்த
நாயே னெவ்வாறு நவிலுமன் புள்ளேனே
தீயேனென் செய்வேனீ செப்பு. (சுஅ)

செப்பும் பலமறையுஞ் செஞ்சேறத்துந் தில்லைவனத்
தொப்பு முயர்வுமொருவி நிற்கு - மப்பனே
நின்னடிக்கீ ழன்புறுத னோகண்டன மற்றையார்
உன்னைமே சாரரோ வுரை. (சுகூ)

உரையார்ந்த பொன்னே யொளிர்சாணை யிட்டுக்
கரையாத மாணிக்கக் கல்லே - விரையார்ந்த
வார்குழலா ளோக்கப்பொன் மன்றுட் டருங்கடலே
யார்துணைநா யேனுக் கருள். (எ0)

அருளே யுருவா யமைந்திட்டபா னின்று
பொருளோய்நின் றூடல் புரிந்து - தெருளோய
நோக்கம்மை நிற்கு நுவலாளோ மன்றுடை
காக்கவெண்டேறே யென்றுயரங் கண்டு. (எக)

கண்டுந்தே னும்பாலுங் காமர் பசுங்கிளியும்
கொண்டுவமா னஞ்சொல்லக் கூடாத - மண்டுசுவை

யென்றுஞ்சொ னின்செவிகட் கேறாமை யென்கொடுமை
மன்று ளமரர்தலை வா. (எஉ)

வாமான் மறையாக்கொண் மாதேவா மன்றுடைய
கோமானே யெங்கள்குணக் குன்றமே - யேமாந்து
நின்னருளை நாடியே நிற்பே னடைந்திலேன்
என்ன வறுமை யியம்பு. (எ௩)

இம்ப கனியினிக்கு மின்னமுதே பூவார
சயனுங்குலவு தில்லைக் கரும்பே - நயங்குலவ
நின்னைப் புகழு நெடும்பாக் கியம்பெற்றேன
என்னே குறைசொ லெனக்கு. (எ௪)

எனக்குநின் பூந்தாளன் பெப்போ தென்கொல்
மனக்கினி பருளு மணியே - புனக்கொன்றைப்
பூந்தாமா மன்றுடும் புண்ணியா வானமர
சேந்தால கயிலையிறை யே. (எ௫)

ஏதோநின் னாம மியம்பத் தெரிந்திலேன
தீதோவு பாடலெங்ஙன் செப்புவேன் - மாதோடு
நின்றுதில்லை மன்றுடு நின்மலா நின்னருளை
யென்றுபெறு வேன்றீய னேன். (எ௬)

ஏனக்கொம பென்று மிலங்கு மணிமார்பா
கூனற் பிறைவேணிக் கோமானே - கானத்
துறைவேடா கோமா னுனக்குமின் சொல்லோ
நிறைமன்றத் தாயென்சொ னிற்கு. (எஎ)

கறைமருவு கண்டத்தன் காமர்நதி யோடு
பிறைமருவு செவ்வேணிப் பெம்மான் - நறைமருவு
சோலைசூழ் தென்றில்லைந் தொன்னகரான் வெள்ளென்பு
மாலையா னீவன் வரம். (அகூ)

வரமேய்ந்த தென்றில்லை மன்னுமண் ணுண்ட
புரமேய்ந்த செங்கைத் தலைவா - புரமேய்ந்த
மின்வாய நெருப்பிற்கு நேராகி நிற்காதோ
பொன்வாய பவமா மெயில். (கூ0)

எயில்சூழ்ந்த தென்றில்லை யீசா விமய
மயில்சூழ்ந்த வாமத்து வள்ளா - லயில்சூழ்ந்த
சூலப் படையாய்நின் றூலடிசூழ்சொல லென்னையன
மாலப் படைப்பாரோ மறறு. (கூக)

மறறும பெறுமடயனென் வன்னெஞ்சே பூஞ்சோலை
சுற்றுந்தென றில்லைச் சுடாமன்றி - லுற்று
நடமாடு மெம்பெருமா னற்குஞ் சிதநதா
மடமாதர் சேவை செயின். (கூஉ)

செயயில் வளைமுரலுந் தென்றில்லைத் தொன்னகரோ
மயில் கைலாய மாமலையோ - பொயயில்லா
வேதமுடி யோதியேன் வெய்யவுள மோபரம
னோதமினறி வாழு மிடம. (கூங)

இடதுமான கொண்ட விறைவா வுதிசி
வடதுசிழன் மேய மருந்தே - தடததுக

சயம்பாயுந் திலலைக் சருந்தா வுளத்து
மயலபாயா வண்ணமருள் வை. (௪௰௪)

வையம் பரவ வளரு மணிமன்றி
லையன் கழனிழலி யானந்தரு - செயயும
திருககூத்தை முன்னின்று சேவிககு மெயடன
பருக்கூத்தை மெய்யில்லை பார. (௪௰௫)

பாரிடங்கள சூழப படர்வனத்தி னின்றாடு
நீரிடங்கொள் செஞ்சடில நின்மலனை - சேரிடங்கொள்
வாமத்தாள் காண மணிமன்று னின்றாடு
மேமத்தா சேத்த வினைந்து. (௪௰௬)

இயம்பப் புகின்மன்றத் தெமமான் பெருமை
நயம்பட்பச் சொல்ல வலமே யியம்பவும்
புல்லோா பெருமை புகலுங் குணவிட்டதும
சொலலோஞ்சொல் லோமே துணிந்து. (௪௰௭)

துணிந்தமறை யாகமங்கள் சொல்லபபொன வேணி
யணிந்த வரவ மசையத் - திணிநதவொளி
மன்றாடு மானந்த வாரமுதுவை யுண்டுவக்குங்
கன்றுடுங் கையுமையாள் கண். (௪௰௮)

கண்மணியே முக்கட் கரும்பே யிருளகற்றும்
விண்மணியே யென்றன்பர் மேவலே - பெண்மணியாம
பாகத்தாள் காணப் பரமன் மணிப்புயப்பூ
ணாகத்தான் செய்யு நடம. (௪௰௯)

V. B. SUBRAHMANIYASARMA TAMIL PANDIT

நடலை யறுத்தோ நமற்கஞ்சோம் பாசக்
கடலை வெளிநிற் கடந்தோம் - திடவன்பு
பெற்றம் பலமடைந்தோம் பேணுவோ மெம்பெருமான்
சிற்றம் பலம்வணங்குஞ் சீர். (௱)

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

பண்பாவந் தாதிநாட் பண்ணவனைப் போற்றியொரு
வெண்பாவந் தாதி விளம்பினான் - விண்பானன்
கோடிந்தி யாகரா வுத்தமவென் றேத்தாசை
சாடிந்தி யாகரா சன்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெள்ளியகோ கிறகறுகு மதிநதிநீ
ராவாதி மிலைந்து வந்தே
யொள்ளியபூந் திருக்கைலை வீற்றிருந்து
நடராசற் குவப்புச் செய்வ
துள்ளியவீ தென்றறிஞர் சொலவெண்பா
வந்தாதி யொன்று பன்னூ
றெள்ளியசீர்த் தியாகராசக் கவிஞ
ரேறினிது செப்பி னால்.

திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பாவந்தாதி.

காப்பு.

திங்களணி செஞ்சடைமா தேவன்வெண்பா வந்தாதி
மங்கள மாக வழுத்தவின்சொ - லிங்கருளு
மாதங்க வத்திரத்து மான்முதலோர்க் கூறெழிற்கு
மாதங்க வத்திரத்து மான்.

சமயாசாரியர்.

அடிகளார், காழிவாய் ஞானக் கவுணியர்கோ னாமணியு
மாழிவாய்க் கன்மிதந்த வப்பனு - மேழிசைவாய
பாட்டுரைத்துக் கண்பெற்ற பாவலனுங் கோவையர
னேட்டெழுதச் சொற்றவனு மே.

அவையடக்கம்.

சீரூருஞ் செலவத் திருக்கோயில் கொண்டருளி
யாரூரு மொற்றியு மாபரன்றன் - பேரூரென
பாடற்குத் தஞ்சிறிதும் பாராதருள்புரிவா
னாடற் குலக னயந்து.

நூல்.

திருவார் கமலைத் தியாகேசா வொப்பி
லொருவா வென்கண்ணே யொழிப்பாய் - கருவாய
பிணிகருமருந் தென்றுன்னைப் பேசலன்றி யென்கண்
மணிகருமருந் தென்பேன் மகிழ்ந்து. (க)

மகிழ்ந்தொற்றி யூராவாழும் வள்ளால்முக கண்ணு
நெகிழ்ந்துள்ள நின்னை நினைப்பேன் - புகழ்ந்துகவி
பாடுவனென் கண்மறைப்பை பாற்றினனென் றென்றுங்கொண்
டாடுவனென் னையா வருள். (உ)

அருளுடையே னென்றென் றறைவையறி வில்லா
மருளுடையேன் கண்ணை மறைத்த - லருளோ
திருவாரூா வாழுஞ் சிவனே வாழ்வாழ
மருவாரூா மாய்த்தாய் வழுத்து. (௩)

வழுத்துவே னொற்றிநகா வாழ்வேநின் றுணைஞ்
சழுததுவே னென்று மயரோன் - கொழுத்தபுக
ழையா வரனே யடியேன் குழிவிழுந்து
நையாத வண்ண நவில். (௪)

நவில வினிக்கும்பன் னுமத்தாய் கற்ற
கவிவலவ ரோத்துகறைக கண்டா - புவியரசா

மாரு ரரசே யமுதே யடலாழித்
தேரூர் விடங்கவருள் செய். (ரு)

செய்ய கழலடியேன் சென்னிமிசை வைத்தருள்வாய
வெய்யவிட முண்ட விமலனே - கைய
ரடையாத வொற்றிநக ராண்டவனே சூலப்
படையார மலர்க்கரத்தப் பா. (சு)

பாவா லுனையன்பிற் பாடேன் பரமேட்டி
பூவாலுன் பொற்பாதம் பூசியே - னோவால
வருந்துமெளி யேனுய் வகையுண்டோ செல்வந்
திருந்துங் கமலையர சே. (எ)

சேவேறி வந்தடியேன் செல்லல்களை வாயமாலும
பூவேறி னானும் புகழ்புனிதா - காவேறிக
கார்தூங்கு மொற்றிநகர் காபாலீ கங்காளா
நீர்தூங்கு செஞ்சடைய னே. (அ)

நேசஞ் சிறிதுமிலே னின்னடிமை யென்றுரைப்பேன்
பாச மகன்றெப் படியுய்வேன - ஈசா
கமலா லயத்தமர்வாய் காரார் களத்து
விமலாநா யேற்கு விளம்பு. (கூ)

விள்ளு பெரும்பிறவி வேலைக் கொருவடவை
யெள்ளுவினைக் காட்டிற் கிருநவியங் - தெள்ளுபுனல்
பாய்சடையா னொற்றியூர்ப் பாண்டரங்கன் வானமரா
ராய்புகழான் செம்பொ னடி. (௪0)

அடியடைந்தார் துன்பத் தழுந்த லழகோ
கடியரவக் கிண்கிணிப்பொற் காலா - முடியின்மதி
வைத்தாய் கமலை வரதா வடாதிமல
முத்தாவுய் மாறக மொழி. (கக)

மொழியத் தெவிட்டா முதல்வாநா யென்றுன்
பொழியக் கருணை யுதவாய் - கழியப்
புகழ்வே னுனையொற்றிப் புண்ணியா வின்றே
லிகழ்வே னிரந்துண்டா யென்று. (கஉ)

என்றுமறிக் கண்ணு வெழிற்கமலை யீசாமான்
கன்று சுமந்த கரதலத்தா - யென்றுனையே
பேசப் பெறுவேனேற் பெற்றேன் பிறவிமுதல்
வீசப் பெருவான் விரைந்து. (கங)

விரையார் மலரிதழி வேய்ந்த விமலா
நரையார் விடைபேறு நம்பா - வரையா
ரரவணிந்த வொற்றியூ ரண்ணலே நெஞ்சிற்
கரவணிந்த நாயேனைக் கா. (கச)

காம னுடல்பொடித்தாய் காலன் படவுதைத்தாய்
பூமன் சிரங்கொய்தாய் பூங்கொன்றைத் - தாமனே
சூல மழுவேன் சுமந்தாய் கனற்கண்சேர்
பால கமலைப் பரா. (கரு)

பரனென்று மொற்றியூர்ப் பண்ணவனென் றுஞ்சங்
கரனென்றுங் காளகண்ட னென்றும் - வரனென்றுங்

கூறு மடியவனைக் கூற்றன்கும் பிட்டகல்வா
னேறும் பகடோ டிரந்து. (கசா)

இரப்பார் பசியா லினைவா ரெனையார்
புரப்பா ரெனவே புகல்வார் - சிரப்பாற்
சிரமேந்து தென்கமலைத் தேவே சனைமுன்
வரமேத வாழ்த்தாத வர். (கஎ)

வரைமகள்வா மத்தான் மணித்திரளை வாரித்
திரையெறியு மொற்றியூர்ச் செல்வன் - பிரசமலாக
காமற் பொடித்த கனல்விழியான் பூங்கொன்றைத்
தாமன்பொற் றுளே சரண். (கஅ)

சரணஞ் சரணமென்று சார்ந்தாலா ரூரா
வரணம் பொடித்தநகை யப்பன் - முரணு
ருமுழவை யதனுடையா னேங்கருளா னெஞ்சே
நழுவவிடு வானோ நமை. (கசூ)

நமரங்கா ளொற்றியூ நம்பனையே சேர்மின்
பமரஞ் செறிபூப் பறிமி - னிமிரவன்றாள்
சூட்டுமினன் னேன்புகழே தொல்லுமின் றன்பொழிய
வோட்டுமின் பேரின்ப முற்று. (உ0)

உற்று றுனையன்றி யுண்டோ வடியேற்குப்
பெற்றுரு நீயே பெருமானே - கற்றார்கள்
பாப்பாடு மாரூர்ப் பரமேசா நோயொழித்துக்
காப்பார்கள் யாரோ கனை. (உக)

கறைக்கண்டா நின்னையொரு காலு மறவேன்
பிறைக்கண்டஞ் சூடும் பிரானே - சிறைககலுழ
னூர்ந்தான் றொழுமொற்றி யூரா யருளுன்னைச
சேர்ந்தார் தெளியும்வகை தேர்ந்து. (உ௨

தேரார் நெடுவீதிச் செல்வந் திருவாரூ
நீரார் சடில நிமலனே - காராருங்
கண்டநின் னன்பாகளாக காலன் கரத்தேந்து
தண்டஞ் செயலென்னோ சாற்று. (உ௩

சாற்றுதிரு நீறணிந்து தண்கண் மணிபூண்டு
போற்றுதிரு நாமம் புகன்றேத்தி - யேற்று
வருவாரதென் னொற்றியூர் வாழ்வாரகா ளானா
மருவார கருவினிடை வந்து. (உ௪

வந்திக்கச் சென்னியுண்டு வாழ்த்திடநன் னாவுண்டு
சிந்திக்க நீயுண்டு செஞ்சடைமே - லந்திப்
பிறையணிந்த தென்கமலைப் பெம்மான்றா ளுண்டு
குறையுண்டோ நன்னெஞ்சே கூறு. (உ௫

கூறுதமி ழொற்றியூர்க் கோமானுக கென்செய்தோ
மேறு விடைமே லெழுந்தருளி - நாறுகுழ
லம்மையொடு காட்சி யளித்தருளி நன்னெஞ்சே
நம்மைப் புரந்தருள நாம். (உ௬

நாமா தவமுடையோ நன்னெஞ்சே தென்கமலைக்
கோமா னெதிர்நின்று கும்பிட்டோம் - பூமாலை

சூடோ மினியகவி சொல்லித் துதியோங்கூந்
தாடோஞ் சிறிதுமித னால். (௨௭)

ஆல மிடற்றி லணிந்துமலா மாதாகக்கு
நீலஞ் செவியி னிறுத்தினய் - கோல
மருப்பணிந்த வொற்றியூர வள்ளா லுனது
திருப்புகழுக் கீறுண்டோ செப்பு. (௨௮)

செப்புங் கமலைத் தியாகேசா வென்றுநீ
யொப்பு முயர்வு மொருவினை - யப்பனே
யுன்னைவிட வென்னை யொழித்தருள்வா யாசேசயை
யன்னைவிட லன்றே யழகு. (௨௯)

அழுதபிள்ளை பாலருந்து மென்பா ரழுது
மிழுதையேன் மாட்டிரக்க மின்றோ - தொழுதனையை
வெட்டுவா ரில்லையொற்றி மேவுபர மாவிதழிக்
கட்டுவார் வேணியழ கா. (௩௦)

காவேந்து பொன்னகரங் கைவிட்டுத் தென்னாரூர
பூவேந்து பூங்கோயில் புக்கமர்ந்தாய் - சேவேந்து
மப்பனே யென்னே யகற்றிற் பழியுண்டோ
துப்பனையோ வேணியாய் சொல். (௩௧)

சொலவேன்கே ளேழையின் றூவாயின் மண்ணிட்டு
வெல்வே னெனைநீ விடுத்தகலவா - யலவாய்
களத்தனொற்றி யூராளி காமற்காய்ந் தானென
லுளத்த னருள்வலிகொண் டோர்ந்து. (௩௨)

ஓராரு நின்புகழை யோர்ந்துன்று டஞ்சமெனச்
சேராரு மின்கவிகள் செப்பாருஞ் - சீரே
திருந்துங் கமலைத் தியாகேசா மண்ணி
லிருந்தென் னிறந்தென் னியம்பு. (௧௩)

இயங்கலிக்கு மொற்றியூ ரெந்தாய்நின் னன்பர்
நயங்கலிக்கும் பாட னவிலேன் - பயங்கலிக்கு
நெஞ்சேன் கொடுநோயை நீக்கிய டியேன்முன்னின்
றஞ்சேலென் னீயே யரண். (௧௪)

அரணம் பொடித்த வழகாநா யேற்கு
மரணம் பிறப்பிரண்டு மாற்றிச் - சரணந்
தருவாயே லாரூர்த்தி யாகேச னென்பே
ரொருவாது நிற்கே யுறும். (௧௫)

உற்ற நிராமயனென் றோதற்கேற் பச்சிறியேன்
பெற்ற பிணிவருத்தம் பேசினேன் - முற்றுணர்ந்து
நீயறியா யொற்றியூர் நின்மலா நீயறியி
னேயறியே னன்றோ நுவல். (௧௬)

நுவலடியார் துன்பொழியா நோன்புமுனக் குண்டோ
கவலடியேன் றுன்பங் களையாய் - சுவலினிடைக
கங்காளா தென்கமலைக் காமாரி வெற்புயிர்த்தாள்
பங்காளா வென்னே பகர். (௧௭)

பகலவன் கண்ணைப் பறித்தாய் புகத்தி
ரிகலிலேன் கண்மறைத்தா யென்னே - பகையு

முறவுமிலா னென்ப துணர்த்தவோ வொற்றி
யுறவிடையாய் நாபேற் கறை. (நஅ)

அறையு மறையு மரியு மயனு
நிறையுஞ் சுரருமெதிர் நின்று - பறையும்
துதியோநின் பூஞ்செவிக்குத் தொலவரஞ்சே ராரூர
பதியோநா யேன்புகலும் பாட்டு. (நகூ)

பாடும் பணியோடுநின் பாதப் பணியடியேன்
கூடும் பொருட்டடிமை கொண்டருளவாய - சூடும
பிறையோய் திருவொற்றிப் பெம்மானே யாரகரு
மிறையோ யிரங்குற் றினிது. (ச0)

இனிய பசுந்தேனு மின்னமுதும பாலுங்
கனிரசமும் பாகுங் கலந்து - நனிநின
செவிககருத்த நாவலூர்ச் செம்மலோ வாரூரப்
புவிககரசே நாயேன் புகல. (சக)

புகலெனககு நீயன்றிப் புண்ணியா வுண்டே
னகலெடுத்து நம்பா நவிலவாய் - ககனந்
தடவுபொழி லொற்றியூரச் சங்கரா நாயே
னிடரொழித்துக் காப்பா யினி. (சஉ)

இனியடியே னென்செய்வேன் யாரை யிரப்பேன்
பனிமதியஞ் சூடும் பரமா - துனியகதிர
வேலோனைப் பெற்ற விமலாவா ரூருடையார்
பாலோ வெனதிடுக்கண் பார். (சந)

பாரளந்த மாயவனும் பங்கயத்து மேயவனு
நீரளந்த செய்யசடை நின்மலா - காரளந்த
கண்டாவென் றேத்துங் கபாலியொற்றி யூரவநுட்
பண்டாரரே கண்ணேப் பாற்று. (௪௪)

பாவலருங் காவலரும் பண்ணவரு மண்ணவரும
பூவலரொண் டாரசிந்துப போற்றியே - நாவலருஞ்
சீருரைகளுந் தெனகமலைத் தெய்வமே யுண்டோநின
பேருரைகத் திராப பணி (௪௫)

பிணியென் செய்நெஞ்சே பேதுறே லொற்றி
மணிகண்டன் பாதமல ராக - கணிகொண்டு
பூசித்து நின்று புனைந்தேத்தி யென்றுநான்று
நேசித்தோ வாம வினை. (௪௬)

நினைவாயென் றுன்றுமெற்றா நின்றுகவி மாலை
புனைவாயென் றுரூப் புனித - னெனையடிமை
கொண்டா னினியென் குறைநெஞ்ச மேயனையன
வண்டார மலர்க்கழலை வாழ்த்து. (௪௭)

வாழ்த்துவது நின்புகழை மன்னுநின்று ளிற்சென்னி
தாழ்த்துவது நின்னைமனஞ் சாத்துவதுஞ் - சூழ்ந்தபொழில்
செற்றவொற்றி யூர்வாழுஞ் செல்வத்-தியாகேசா
முற்றவழி லாககெளிதா மோ. (௪௮)

மோதகக்கை யாற்பெற்ற முன்னவா நாயேன்செய்
பாதக முற்றுமழுற் பஞ்சன்றே - கோதகனின்

னன்பர்களை யாரூர்த்தே வாசிரியன் காவணத்துந்
துன்பகலக கண்டு தொழின். (௪௯)

தொழுவா ரெழுவார் துதிப்பார் மதிப்பா
ரழுவாரகூத் தாடுவா ராகி - வழுவாநின்
றிருண்டரடித தொண்டுசெயுந் தூப்பே றெனக்கொற்றி
யண்டாபிரா னேயருள்செய் யாய். (௫௦)

ஆயாச் சிறியேனு மாய்ந்தபெரி யோருறும்பே
றேயா மகிழ்நினை யெய்தினேன் - றூயா
மதியு மரவுமுடி வைத்தாயா ரூர்வாய்
நிதியே யதனை நினைத்து. (௫௧)

நின்னைத் துதித்திடுவே னின்வாமத் தேய்ந்தமலைப்
பொன்னைத் துதிததுப் புகழுவே - னுன்னருமை
மக்களையு நன்கு வழுத்துவே னொளொற்றி
யககரவம் பூண்டருளை யா. (௫௨)

ஆவா வடியே னலந்தே னணியாரூர்த்
தேவா தியாகச் செழுஞ்சுடரோ - நோவாலே
யெத்தனைநா ளல்லற்பட் டேங்குவே னெம்பெருமான்
சித்தமிரங் காயென் செயல். (௫௩)

செயலொன்று மின்று திருவொற்றி யூர்வாழ்
புயலொன்று வேணிப் புனிதா - பயலொன்று
வெற்பரசி யோடு மிளிர்காட்சி தந்தருடொங்
கற்பனையான் பாநாய கா. (௫௪)

காட்டுங் கதிரவனீ காணுங்கண் ணாயேனென்
மாட்டு விளங்கொளிநீ மாற்றினாற் - காட்டுதற
மெங்கு விளக்குவா யீசாதென் னாரூரிற்
றங்கு மூலகநா தா. (௫௫)

தாதாநீ யேநின்பாற் சார்ந்திரப்போன் யானுவந்து
நீதாவென் றேனென்னை நீக்கினா - லோதுகொடை
மற்றெங்குக் காட்டுவாய் மாதேவா வொற்றியூ
ருற்றபர மாபுகலே தோ. (௫௬)

ஓவென் றலறி யொளியடியேன் கண்ணிற்குத்
தாவென்றே னீதிரத்த றானன்றோ - வேவினா
னென்றுசினந் தொன்றுளையா யோப்பரவை யாமனைகேன்
சென்றாய் கமலையமு தே. (௫௭)

தேவர்பர வொற்றியூர்ச் செல்வாநின் செஞ்செவிக்கண்
மூவர்தமி ழோடியான் மொழிபுன்சொற் - பாவும்
புகுமேயா ழோசையொடு புன்மா னொலியு
நகுமே யதனு ணயந்து (௫௮)

நயந்துகே ளாயே னவிலொருவின் ணப்பம்
பயந்தவிர நின்பேர் பரித்தேன் - வயங்காரூ
ரெந்தாயான் கண்ணிழந்தே னென்றாலி யாவர்க்குந்
தந்தாய்நீ கண்ணிழந்தாய் தான். (௫௯)

தானக் களிற்றின் றலைமே லுலாப்போதும்
வானத் திறைபிரமன் மால்வாழ்வு - மேனத்தின்

கோடணிந்த வொற்றியூர்க் கோமானின் றெண்டுசெயும்
பாடணிந்த வாழ்விற்கொப் பா (௬௰)

பாடக்கண் பாவலர்க்குப் பண்டுதந்தா யின்றுன்னை
நாடக்கண் ணுயேற்கு நன்குகவி - னீடுன்
புகழ்புதிதா மாரூரப் புனிதா வஃதன்றி
யிகழ்பவரோ யாரு மிலர். (௬௧)

இல்லை யெனவிரந்தாக் கீயாமை புண்ணியமோ
கொல்லைவிடை யூருமொ குழகனே - நல்லை
யெனவுரைப்பார் நிறகின்றே வீசனே யொற்றிய
பனவனே யீததுவககும் பண்பு. (௬௨)

பண்புடையெந் தாய்நாவற் பாவலறகுத் தோழமைகொ
ணண்புடையா னென்றுவிழி நலகினுப் - நண்புடையே
னல்லே னெனினு மடிமையா ளுரூர்வாழ்
நல்லா யெனககும்விழி நலகு. (௬௩)

நல்குரவெஞ் ஞான்று நணுகாது நால்வர்க்குச்
சொல்குரவு பூண்ட சுடாமதியான - பல்குரவு
பாவைதரு மொற்றிப் பரமன் புகழ்பாடு
நாவையுடை யார்பா னயந்து. (௬௪)

நயனங் களிக்க நடனஞ்செய் நாதா
பயனங்கை வைத்த பரமா - வியனஞ்ச
முண்டவா ரூரா வுறுகோ யொழித்தென்னைக்
கண்டுகொள லிற்கே கடன் (௬௫)

கடனஞ் சமுதாக்கக கற்றுய் தமியே
னுடனஞ் சனமோ பொழிகக - விடையோனே
கல்லா யெனிலென் கரைவாய்தென் ஞெற்றிவாழ்
மல்லாயெல் லாம்வலல வா. (௬௬)

வாயே யுனகதென்மேல் வாழ்வென்றெல் லூரூர்வாழ்
தாயே யனைத்துயிர்க்கு தந்தையே - நாயேனைக்
காட்பாய் கருணைக் கடலேயென் றின்றமிழாற
பாப்பாடிற் போமே படா. (௬௭)

படவரவந தோடுபுலிப் பாதனுங்கண் டேத்த
நடவரவங் காட்டுகழ னம்பன் - றடமதிலசூ
ழொற்றியூர மேவு மொருவற பணிந்தேத்தும
பற்றுளாக குண்டோ பயம். (௬௮)

பயன்மறியகு சென்னி பரித்தாயவெற் றீன்ற
கயலவிழியோர் பாகங் கலந்தாய் - வியனூாக
கம்பிகா தாகருணைக் கட்டியே நாயேனை
நம்பிகா தான் னலம். (௬௯)

நலமொன் றுனக்குரைப்பே னன்னெஞ்சே கேட்டி
பிலமொன் றரவணிந்த பெம்மான் - கலமொன்று
வாரிசூ ழொற்றியூர் வாழ்வான் பெருங்கருணை
நாரிபா கன்கழலே நம்பு (௭0)

நம்பினே னுன்னை நழுவவிடேல் வெந்நோயால்
வெம்பினேன் வீதி விடங்கனே - தும்பிக்

கரத்தோனே யானுமொரு கான்முளைமண் ணுண்ட
சரத்தோ யருள்கமலே சா. (எக)

சார்ந்தோர்ப் புரக்குந் தயாநிதிநீ யேயெனமுற்
றோர்ந்தோர் சொலல்கேட் டுனையடைந்தேன் - வார்ந்தமலைச்
சாபாதென் னொற்றிநா தாகாமுன் கூடலிலே
மாபாவி யைப்புரந்த வா. (எஉ)

வாழ்வுனக்கீ சன்புகழை வாழ்த்தலே வன்னெஞ்சே
தாழ்வுனக்கன் றேன்புகழைச் சாற்றுமை - பேழ்புவியும்
போற்றுங் கமலைப் புராணனைவாய் வந்தபடி
சாற்றுறுதி யீதுனக்குத் தான். (எங)

தானே தனக்குச் சரியாநின் றண்மலர்க்கி
யானே சரண மடைந்தடிமை - யானே
னினியென் செயினுஞ்செ யெம்பெருமா னின்பங்
கனியொற்றி யூர்ச்சங் கரா. (எச)

கராவாய் மதலைவரக் கண்டாய்தென் னாரூர்ப்
பிரானேயாற் றிட்டசெழும் பீதம் - பராவக
குளத்துவரச் செயதாய் கொடியேன்கண் டந்தால்
வளத்தவையோ டொன்றுமம் மா. (எரு)

மாதேவா வொற்றியூர் வள்ளா லடியார்செய்
கோதே கொளாதகுணக் குன்றமே - சூதேய்
முலையா ளமர்பாகா முன்னவா நீயே
னுலையா தருளை யுதவு. (எசா)

உதரஞ் சுமந்த வுலகளந்தோன் மார்பத
தந்தரஞ் சிவந்தா ளகலாக் - குதர
நிகாமா ளிகையாரூர் நின்மலா வென்று
பகாவாதுன் போடும் பறந்து. (எஎ)

பறவையூர் தேவர் பரவும் புனிதா
நறவையார் கொன்றையணி நாதா - வுறவை
யடையாா புரஞ்செற்ற வண்ணலென் னொற்றி
யுடையா யெனையா ளுவந்து. (எஅ)

உவந்தால முண்டமர ரூர்புரந்த நம்பா
தவந்தானுஞ் சற்றேனுஞ் சாரேன் - சிவந்தால
மனையமன ரென்றி லறியேனு ரூரரசே
உனையனறி வேறுதுணை யொன்று. (எகூ)

ஒன்றுபுகல் வேனன் றுணாநெஞ்சே நீயுனக்கு
நன்று புரிதற்கு நாடினல - வன்றிறன்மா
லேறுடையா னொற்றியூ ரெமமான்றன் சென்னிமிசை
யாறுடையான் சீரையே யாய். (அ0)

ஆடரவக் கிண்கிணிக்கா லையா பிறையோடு
சூடரவச் செஞ்சடையாய் தொண்டாசீா - பாடரவ
மோவாத திருவாரூ ருத்தமா நாயேனைக
காவாமை நன்றோ கழறு. (அக)

கழல்பணியக் கல்லாா கருதுபுகழ் சொல்லாா
விழலுக கிறைத்தே விளிவாா - குழன்மொழியாள

வாமத்தான் றிங்கள் வளர்சடையான் பொன்னிதழித்
தாமத்தா னொற்றிநகர் சார்ந்து. (௮௨)

துன்பமெலா நீத்தோரு சுடுநோ யறத்துறந்தோ
மின்பமெலா மெய்த வினிந்தடையெ - னன்ப
ருளத்தான்றென் னூரூர்வா ழும்பர்பிரா னஞ்சார்
களத்தான் புகழ்நாக் கலந்து. (௮௩)

கரத்தி லபய வரதங் கலந்தாய்
சிரத்திற் சிரமாலை சேர்த்தாய் - வரத்தை
யருளாயஞ் சேலென் றடியேனுக் கென்னோ
தெருளாளா வொற்றியர சே. (௮௪)

சேலேந்தி னன்றீயத் தீத்த பழிதீர
வேலேந்தி னனை விதித்தவழற - பாலவிழிப்
பித்தன் கமலைப் பிரானெதனுற் றீர்ப்பானோ
பத்தற் கருளாப் பழி. (௮௫)

பழியஞ்சி யென்னொருபேர் பண்டுகொண்டா யன்டர்
வழியஞ்சி யஞ்சிககால் வைத்துக - குழியஞ்சி
யாழப் புரிந்துபழிக் கஞ்சா னெனும்பழியின்
மூழ்கலொற்றி யாய்முறையா மோ. (௮௬)

மோலிமுடி சூடி முறைநிறுவி னுயரசாய்
நீலி யிடத்துவைத்த நின்மலா - சூலி
திருமுன் முறையிடுன் செஞ்செவியே லாமை
தருமமோ வாரூரத் தா. (௮௭)

தாங்கும்பிமி லேறுச் சரமாத் துவசமா
வீங்கு முலைமனையா வெம்பணியிற் - றாங்கு
மொருவனைக்கொ ளொற்றி யுடையாய்நா யேனை
மருவ வுமை யாககொள்ளு வாய். (அஅ)

வாரார் கயிலை மலையோ மறைக்காடோ
வேராரூர் கோயிலோ வெண்ணுளமோ - சீராரூர்த்
தம்பிரான் கங்கைச் சடைமுடியான் பூங் கொன்றையணி
பெம்பிரான் வாழு மிடம். (அகூ)

இடங்காவல் பூண்டாருக் கெந்தாய்நின் சென்னி
மடமகாத காதலெழி னைகுர் - தடங்கொங்கை
மின்னேயரு சொல்லேன் விளங்கொற்றி யூரம்பா
பின்னே தெளிக்கருள்வாய் பேசு. (கூ0)

பேசேனீ யன்றிப் பிறதெய்வ முண்டென்று
கூசே னினையென்றுங் கும்பிடுவே - னேசேன்
பலியேற்கு யென்றுருர்ப பண்ணவா நோயா
னலிவோட் டுவதெந்த நாள். (கூக)

நாளே வினையே நமனே நவக்கோளே
கோளே புரியவெனைக கூடனமின் - றுளோ
யெனக் களித்தா னொற்றியூ ரெம்பிரா னென்புன்
மனககுளிருப் பானென்றும வந்து. (கூ௨)

வந்தேன் றிருமுன் மகிழ்ந்துபணிந் தேனமுதே
செந்தேனே கறகண்டே சீனியே - னொந்தேனைக

காவென்றே ஞருர்முக கண்ணு வருளாது
போவென்று லன்றே புகழ். (௬௩)

புகழ்ச்சிவிருப மில்லா புவனத்தில் யாரே
யிகழ்ச்சிவிருப் புள்ளா ரெவரோ - புகழ்ச்சி
விருமபினையே லெற்கா விமலாதென் ஞெறறிக
கருமபினையோ சொலலாள்பாகா. (௬௪)

பாகங் கலந்தமலைப் பாவைபாய பாவைமா
மோகங் கலந்தமுழு மூடனென - நேகங்
கலந்தபிணி நின்னருண்முன் காண்முன்றுய யன்றே
நலந்தழையு மாருரண்ணு. (௬௫)

அண்ணுதென் ஞெறறியூ ராண்டவா செந்தமிழா
பண்ணா கவிபாடிப் பாவலராக - ணண்ணு
விரககிலெதிர பேசாதொன் றீயா திருந்தார
புரககுட்வள்ளற் கீதொருபண் போ (௬௬)

போதன் பணிபாதன் புண்ணியன்றெனகமலை
நாதன் திருநாவ ஞவலாகருத் - தூதன
கலங்குமெளி பேற்கருளாக காரணமென் னமேதோ
துலங்கு மருளைச் சுமந்து. (௬௭)

சுமந்தா யருளைச் சுடுநோய் தொலைக்காய
கமந்தா னிதுவோ கழறுய் - நமன்று
னுருளவுதைத தாயொற்றி யூரா யுலக
மருளவதெங் குக்கொட்டு வாய. (௬௮)

வாயாரப் பாடி மனநெகிழச் சிந்தித்து
நோயாலந் தோவின்னு நோவேனோ - தீயானைப்
பாடிப் பரிசுபெறும் பாவியோ யான்மன்றத்
தாடிமகி ழுங்கமலை யாய். (௯௯)

ஆய்ந்தவன்பர் கூடிக்கூத் தாடிப்பே ரானந்தந்
தோய்ந்துமகி ழொற்றியூர்த் தொன்னகரில் - வாய்ந்தபர
ஞானந்தபுகழ் பாடு மறிஞரில்லந் தோறுமென்றுஞ்
சேர்ந்து மகிழுந் திரு. (௧00)

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருக்கமலை யொடுமொற்றித் திருநகர்வா
ழருட்செல்வத் தியாகே சன்றெண்
டருக்கமலை யிரந்தளித்தோ னருக்கமலை
யணிவேணி யண்ணன் மீதே
இருக்கமலைச் சிரகிரிவாழ் தியாகரா
சக்கவிஞ னெம்ம னோர்தம்
வருக்கமலை வறவன்பின் முதற்பாவந்
தாதியொன்று வகுத்தான் மன்னோ.

ஆரூரி னெடுமொற்றித் திருநகரிற்
புற்றிடங்கொண் டமர்ந்தே யாழித்
தேரூருந் தியாகேச னிருந்தாடுஞ்
செயம்கேதுத் தெரியி னிந்த
வூரூரும் புகழ்த்தியாக ராசநா
வலனன்பி னியம்பு செப்பற்
சீருரு மினாறுதியை முனமறிந்த
மகிழ்வென்று செப்ப லாமால.

திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி
வெண்பாவந்தாதி.

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் மருந்து வெண்பாமாலை

காப்பு.

சீர்பூத்த வாரூர்த் தியாகேச னைத்துதிக்க
நார்பூத்த விஞ்சொ னனியருளு - மோர்பூத்த
வைங்கரனால் வாய்முகக்கண் ணாந்தருளி யம்பாரு
மங்களஞ்செய் தெய்வ மருந்து.

சமயாசாரியர்.

தீயபிணி தீர்க்குஞ் சிரபுரத்து வாழ்மருந்து
வாயரசென் னும்பேர்கொண் மாமருந்து - பாயவிழி
மாசகலப் பாடுநா வன்மருந்து மாணிக்க
வாசகப்பேர் பூண்ட மருந்து.

நூல்.

திங்களணி வேணித் தியாகேச னென்னும்பேர்
தங்கப் புனைந்த தனிமருந்து - துங்கத்
திருவந் தருமருந்து செய்யமறைச் சென்னி
மருவுமருந் தாரூர் மருந்து.

கொன்றை யணிந்த குணமருந்தன் பர்க்கென்று
நன்று மகிழ்ந்துபுரி நன்மருந்து - குன்றாத
காட்சியடி யேற்கருளுங் கண்மருந்து கல்வியான்
மாட்சிபெறு மாரூர் மருந்து. (உ)

மால்பிரமன் காணாத மாமருந்து தற்புகழு
நூல்பலவாய்ந் தோராபிறவி நோயமருந்து - காலற்காய்ந்
தெள்ளுத லில்லா வெழின்மருந் தேற்றவாகரு
வள்ளலா மாரூர் மருந்து. (ங)

தேவர்க் கரிய திருமருந்து தென்றமிழான்
மூவா பரவு முதன்மருந்து - காவாரா
கரமருந்தென் கண்ணேப் கரகுமருந் தென்றும்
வரமருந்தா மாரூர் மருந்து. (ச)

நீறு புனைந்த நிமலமருந் தோவாது
நாறுகுழல் பால்வைத்த நன்மருந்து - வேறுதுணை
யிலலாப் பெரிய வெழின்மருந்தெல் லாஞ்செய்ய
வல்லதா மாரூர் மருந்து. (ரு)

மாலேற்றிற் காட்சிதரு மாமருந்து செங்கையில
வேலேற்ற கான்முளையின் மெய்மருந்து - காலேற்ற
சென்னியா ரேத்துந் திருமருந்தெல் லாநோய்கரும்
வன்னியா மாரூர் மருந்து. (சா)

பெண்ணையிடப் பாற்கொள் பெருமருந்து தன்வயிற்றின்
...ணைவைத்த வேற்றில் வருமருந்து - கண்ணை

யகழ்ந்தவன்பர் சண்ட வரு மருந்தெல் லோரு
மகிழ்ந்துகொளு மாரூர மருந்து. (எ)

ஆவணங் காட்டி யடிமை கொளுமருந்து
கோவணங்கள் எத்திற் கொளுமருந்து - தாவாக
கதியடியாக கீந்து களிக்கு மருந்து
மதிமுடித்த வாரூர மருந்து. (அ)

அன்பாதுயர் காணு வருமருந்து தாள்பணியா
வன்பர்துயர் மாற்று மருந்துபே - ரினபம
பயகருமருந் தோர்நால்வா பாடுமருந தென்னுண்
மயக்கறுதத வாரூர் மருந்து. (கூ)

வெள்ள முடித்தசடை மெய்மருந்து நாயடியே
னுள்ளப்பூங் கோயி லுறைமருந்து - களள
மிருவா வுளத்தாக் கினிககுமருந தின்னன்
மருவாத வாரூர மருந்து. (௧0)

காமனைக காய்ந்தநுதற் கண்மருந்து கூடலிலே
மாமனுய வந்து வழககுரைத்த - தேமருந்து
கன்னியோா பாகங் கலந்தமருந தங்கையிலே
வன்னிவைத்த வாரூா மருந்து. (கக)

மான்மழு வங்கைமிசை வைத்த தனிமருந்து
தேனமாபூங் கொன்றைத் திரு மருந்து - கானமாநத
வேட்டுவனு ருட்டேன் மிசைந்தமருந் தென்பிறவி
வாட்டுமருந் தாரூா மருந்து. (கஉ)

சுந்தரத்து நீலங் கலந்தமருந் திங்கவிசொல்
சுந்தரர்க்குக் கண்ணேய்த் தொலைத்தமருந் - திந்துமுடி
பாரந்தமருந் தம்பலத்தி லாடுமருந் தோயாது
வார்ந்தபுக ழாரூர் மருந்து (கக)

கண்டக் கறைமருந்து கான்மலர்சேர் மாணிக்கத்
தண்டதரற் காய்ந்த தனிமருந்து - துண்டப்
பிறையணிந்த சென்னிப் பெருமருந்து தூய
மறைபுகழு மாரூர் மருந்து. (கச)

வெம்பணியிற் றுஞ்சும் விடைமருந்து மெய்யடியார்
நம்ப வருள்புரியு நன்மருந்து - கம்பக
களிறுரித்த கைமருந்து காமன்றே ராய
வளிதவழு மாரூர் மருந்து. (கரு)

அப்பர்சூடர் நோய்தீர்த் தருண்மருந்து பாண்டியன்மெய்
வெப்பொடுகூ னுந்தீர்த்த மெய்மருந்து - துப்பினையே
யொத்த சடிலமருந் தும்பர் தொழுமருந்து
மத்தமுடி யாரூர் மருந்து. (கசு)

என்னைப்பெண் ணாச்செ யெழின்மருந்து சுந்தரர்மெய்த்
துன்னைத் தவிர்த்தருளுந் தூயமருந் - தன்னை
யிழவார் பிறப்பறுக்கு மின்மருந்திற் றேறு
மழவார்தென் னாரூர் மருந்து. (கஎ)

விண்மணியைக் கண்ணாக்கொண் மெய்மருந்து நாயடியேன்
கண்மணிக்கு முன்னொளியைக் காட்டுமருந் - தெண்ணுமணி

கண்டனென வண்டர் களைமருந்து சோலைதொறும்
வண்டமர்தென் னாரூர் மருந்து. (௧௮)

தாமரையோன் சென்னி தடிந்தமருந் தென்பிறவி
நாமலைய வோட்டு நலமருந்து - தேமலர்ந்த
பூவடியென் சென்னி பொருந்துமருந் தேகம்ப
மாவடிவா ரூரா மருந்து. (௧௯)

கண்சுமந்த நெற்றிக் கவின்மருந்து வந்திக்கா
மண்சுமந்து பிட்டுண்ட மாமருந்து - பண்சுமந்த
சாமம் பரவுந் தனிமருந்து வெம்பரசி
வாமருந்தா ரூரா மருந்து. (௨௰)

பாம்பும் புலியும் பணிமருந்து பாண்டியனை
வேம்பணிய றுங்கும் வியன்மருந்து - காமனைய
தோண்மா தொருபாகந் தோயமருந்து கண்ணுப
வாண்மாத ராரூர் மருந்து. (௨௧)

இந்திரன் போற்று மெழின்மருந்தி ரெண்கலைசோ
சந்திரனை நந்தேயத்த தனிமருந்து - மந்திரமா
மஞ்செழுத்துள் வாருக கருண்மருந்து வாழ்பவாகள
வஞ்சமகற் றாரூர் மருந்து. (௨௨)

தாரணிந்த கொன்றைச் சடைமருந்து வாமத்து
வாரணிந்த மென்முலையாள் வாழுமருந் - தோரணிந்த
வேதமுடி வைகும் வியன்மருந்து வென்றசீர்
மாதவர்வா ழாரூர் மருந்து. (௨௩)

பைவைத்த பாப்புப் பணிமருந்து பாணருக்காத்
தெய்வக் கவியெழுது சீர்மருந்து - வைவன்பார்க்
கெய்தப் பொருந்தா வியன்மருந்து கந்தரத்து
மைவைத்த வாரூர் மருந்து. (உச)

வேளைப் பொடித்த விழிமருந்து வெற்பெடுத்தான்
றோளை நெரித்த சுடர்மருந்து - தாளைப்
பரவுமடி யாரதுன்பம் பாற்று மருந்து
வரமருளு மாரூர் மருந்து. (உரு)

சூலப் படைசுமந்த தொன்மருந்து பாகத்தி
லேலக் குழலியம ரின்மருந்து - கோலத்
திருப்பதத்தின் மால்விழிசேர் சீர்மருந்து வன்றி
மருப்பணிந்த வாரூர் மருந்து (உசு)

உழுவை யுரியை யுடுத்த மருந்து
வழுவைபுரி போர்த்த மருந்து - கழுவிற்
கொடியானை யேற்று குணமருந்து செந்தேன்
வடியிதழி யாரூர மருந்து. (உஎ)

தேமா நிழலிற் சிறந்த திருமருந்து
பூமாது போற்றும் புகழ்மருந்து - கோமான்
முசுகுந்தன் கண்ட முதன்மருந்தங் கையில்
வசுவேந்து மாரூர் மருந்து. (உஅ)

கள்ளார்ந்த வாத்திய உகாத்தமருந் தன்பாக்கு
வெள்ளானை யீந்த வியன்மருந்து - நள்ளார்.

புரமெரித்த வீரம் புகழ்மருந்தி யாரும்
வரமுகக்கு மாரூர் மருந்து. (உகூ)

கற்றோர் புகழுங் கவின்மருந்து காழியர்க்குப்
பொற்றாளந் தந்த பொருவின்மருந் - தற்றோர்க்
கிருநிதியாய்க் காக்கு மியன்மருந்து சார்ந்தோர
மருளகற்று மாரூர் மருந்து. (௩0)

சேற்கொடியன் சூரலடி சேர்மருந்து புற்பறவைப்
பாற்கடலக் கூ யுண்ணப பணித்தமருந் - தேற்க
நுளையர்குலப் பெண்வேட்ட நோன்மருந்து கூடல்
வளையல்விற்ற வாரூர் மருந்து. (௩க)

தேசம் புகழுந் திருமருந்து தேங்கொன்றை
வாசம் பொலிவேணி மாமருந்து - பாச
மகழுடியா ருள்ளத் தமரு மருந் தொற்றி
மகிழடிவா ழாரூர மருந்து. (௩உ)

மண்ணொடுவிண் கீண்டு வளர்மருந்து வான்கவிஞ
ரெண்ணுஞ்செந் நாவிருக்கு மின்மருந்து - பண்ணோ
டிசைபாடித் தெவ்வோட்டு மின்பமருந் தாரு
வசைபாடா வாரூர் மருந்து. (௩௩)

சேந்தன் றவிட்டமுதுண் சீர்மருந்து பூஞ்செல்வி
காந்தனுக் காழிதந்த காமமருந் - தேந்து
கொடியில விடைவைத்த கோமருந்து கற்போர்
மடியடையா வாரூர் மருந்து. (௩ச)

பெற்றமுவந் தேறும் பெரியமருந் தெக்கலையு
முற்றவுணர்ந் தோருணரு முன்மருந்து - நற்றவத்தோர்
சூழுமருந் தோரிரண்டு தூயசெல்வ நல்குமினனா
வாழுந்தென் னாரூர் மருந்து. (௧௫)

வேதப் பரியுகைத்த மெய்மருந்து வேகவதி
பாதமலா நாறப் படர்ந்தமருந் - தோத
வுலவாப் புகழ்மருந் துத்தமாகருத் தீய
மலமாற்று மாரூா மருந்து. (௧௬)

மாயப் பகழிகொண்ட மாமருந்து வஞ்சர்புரந்
தீயக குறுமுறுவல செய்மருந்து - தூயகதி
நலகு மருமருந்து நாடும் பெருஞ்செலவ
மல்குந்தென் னாரூா மருந்து. (௧௭)

கண்ணுக கினிய கவினமருந்து காமர்மலைப
பெண்ணுக் குயிராம் பெருமருந்து - விண்ணமராக்
காவி யுதவுமருந் தால மயின்மருந்து
வாவிசூ ழாரூா மருந்து. (௧௮)

வீதி விடங்கனெனு மெய்மருந்து தூதாகிப
பாதமலர் நோவப படர்ந்தமருந - தோதி
யுணர்ந்தா ரறிந்தமருந் தும்பரெலாம் வாழ்த்தி
வணங்குந்தென் னாரூா மருந்து. (௧௯

தேவி மகிழத் திருநடனஞ் செய்மருந்து
பாவியேன் கண்ணோயைப் பாற்றுமருந் - தோவி

லருளே திருமேனி யாக்கொண் மருந்து
மருளேயா வாரூர் மருந்து. (சo)

வானும் புவியும் வணங்குமருந் தன்பாக்குத்
தேனும்பா லும்போன்ற சீர்மருந்து - கூனுங்
குருடுந் தவிர்மருந்து குத்தரமான் கொங்கை
வருடுங்கை யாரூர் மருந்து. (சக)

வரத்தையடி யார்க்கருளும் வான்மருந் தங்கி
கரத்தைத் தடிமருந்து காவற் - புரத்திற்
றயித்தியரைச் சாடுந் தனிமருந்து வேளூர்
வயித்தியனு மாரூர் மருந்து. (சஉ)

எய்யாப் புகழ்மருந் தேத்தித் தொழுமடியா
ரையா தருள்புரியு நன்மருந்து - வெய்ய
ரடைய வரியமருந் தற்றாக கினிய
மடையருளு மாரூர் மருந்து. (சங)

இரந்தமலை வன்றொண்டர்க கிட்ட மருந்து
பரந்தமலைப் பாவைமுலைப் பாலைச் - சுரந்தன்பிற்
காழிமழ வுக்கருத்தக் கண்டமருந் தண்டரெலாம்
வாழியவென் றாரூர் மருந்து. (சச)

வீழி மிழலையிடை மேவியவா கீசருக்குங்
காழியாகோ னுக்கும்பொற் காசளித்த - பாழிமருந்
தும்ப ரமுதுணருஞ் சுண்மருந்து பூஞ்சோலை
வம்புசெறி யாரூர் மருந்து. (சரு)

மன்னுங் கயிலை மலைமருந்து வான்மதிய
மின்னுஞ் சடைமுடியில் வேய்மருந்து - முன்னுந்
தனையிரந்தோர்க் கீயுந் தனிமருந் தன்பா
மனையிரந்த வாரூர் மருந்து. (௪௬)

ஏடாற் றெதிரேற்று மின்மருந்து தன்னையென்று
நாடார் துயர்நாடா நன்மருந்து - பீடார்
தலைவளைத்துத் தாடகைகைத் தாரகொண் மருந்து
மலைவளைத்த வாரூர் மருந்து. (௪௭)

ததிவிரவு சோறு தருமருந்தப் பர்கரு
விதிமுடியைக் கொய்மருந்து மேலா - நதிமுடியிற்
றாங்குமருந் தொண்கலத்திற் றுபதயின் ஞாபிச்சை
வாங்குமருந் தாரூர் மருந்து. (௪௮)

தைப்பூச மாடத் தகுமென் றருண்மருந்து
மெய்ப்பூசு நீற்று வியன்மருந்து - கைப்போதில்
மானேந் தியமருந்து மாமதப்பெய் பூம்பொழில்கள்
வானோந்து மாரூர் மருந்து. (௪௯)

ஓடு கவர்ந்திளமை யோரன்பர்க் கீந்தமருந்
தேடுகனல வேவா தியற்றுமருந் - தோடு
நரிபரியாச் செய்மருந்து நாவலர்பா டுஞ்சீர
வுரிபுனைந்த வாரூர் மருந்து. (௫௦)

கண்களிக்குங் காட்சிக் கவின்மருந்து காரிமயப்
பெண்களிக்கும் பாகப் பெருமருந்து - விண்களிக்க

வால மயின்றமருந் தம்பொன் னடியடைந்தார்
மாலகற்று மாரூர் மருந்து. (ருஎ)

இருந்தாடி யின்பெவர்க்கு மீயு மருந்து
பொருந்தாரூர சுட்ட புகழ்சோ - மருந்துமலாத்
தாட்குறி யன்பா தலைக்கருளித் தன்றலையில்
வாட்குறிகொள ளாரூா மருந்து. (ருஅ)

மண்முனிரு நான்குருவம் வாய்ந்த தனிமருந்து
கண்மூன் றுடைய கவின்மருந் - தொணமாழை
செங்கலைச செய்மருந்து தேவர் தொழுமருந்து
மங்கலிலா வாரூா மருந்து. (ருகூ)

குனறுசிலை யாககொள் குணமருந்து வேதநெடு
ஏனறுகுணி லாககொண்டோன காணும - னின்றுதழ
லோஙகலா யோங்கி யொளிருமருந் தம்மைக்கு
மாங்கனிநல் காரூர் மருந்து. (ருசா)

பாசு பதவாளி பாாத்தற்கு நல்குமருந்
தேசலிலா ஞய ரிசைக்குருகு - மாசின்மருந்
தின்னல தயாக்கிசையா வின்மருந்தின் பேயுருவாய்
மன்னுமருந் தாரூர் மருந்து. (ருரு)

புறநிடங் கொண்ட புகழ்மருந்தென் புன்பவநீர்
வற்றிடச் செய்த வளமருந்து - கற்றுப்
புரந்த கணைமருந்து பொன்குளத்திற் கொள்ள
வரந்தந்த வாரூர் மருந்து. (ருசு)

நம்பினோ ரைக்கை நழுவவிடா நன்மருந்து
வெம்பினேன் வெந்நோயை வீட்டுமருந் - தெம்பிரா
னென்னப்பூங் கோயி லிருக்குமருந் தோரைந்து
வன்னத்தென் னாரூர் மருந்து. (௫௭)

மதிசேர் சடைமருந்து வன்றொண்ட னாகுப்
பொதிசோறு தந்த புகழ்சேர் - நிதிமருந்து
நாளைப்போ வாரகாண நந்திவிலக் கும்மருந்து
வாளைச்செய் யாரூர் மருந்து. (௫௮)

பூதநன் றலையிலடி வீழ்ப பூரிமருந்து
முதநன்னன வேத மொழிமருந்து - சித்தனுய்க
கலலானை தின்னக கரும்பு தருமருந்து
மலலார்தென் னாரூர் மருந்து. (௫௯)

தூசொலிக்கும் கன்மோதுந் தொண்டர்தலை தாங்குமருந்
தேசொலிகே ளாச்செவிகொ ளின்பமருந் - தாசை
யறுத்தமருந் தண்டங்கீண் டோங்கு மருந்து
வடுத்தவிர்ந்த வாரூா மருந்து. (௬௦)

பன்றிபுவி கீண்டறியாப் பாத மலர்மருந்
தொன்றியொன்று மின்பெற் குதவுமருந் - தென்று
மழியாப புகழ்மருந் தன்பரொலாஞ் சென்னல
வழிதேற்று மாரூர் மருந்து. (௬௧)

அப்பூதி யார்சேயை யண்ணுவிடந் தீர்த்தமருந்
தொப்போ துருநின்ற வூரப்பூச - நப்பின்றிச்

செய்தமனக் கோயில்குடி சேர்மருந்து செங்கையிலே
வையமர்கு லாரூர் மருந்து. (௬௨)

இன்பமழ வன்புதல்வி யெய்துநோய் தீர்த்தமருந்
தன்பர் பணியா லடைந்தகொடுந் - துன்பகலப
பண்ணு மருமருந்து பாவியேன் கண்மாசு
மண்ணுமருந் தாரூர் மருந்து. (௬௩)

ஈசனென வோர்மொழிப்பே ரெய்து மருமருந்து
வாசமலர்க் கொன்றை வனைந்தமருந் - தாசில்
குருமருந் தின்பங் கொடுக்குமருந் தொண்சீர்
மருவுமருந் தாரூர் மருந்து. (௬௪)

தாயிரங்கா யென்னத் தருமருந்து சம்பந்தர்க
காயிரஞ் செம்பொ னருண்மருந்து - நோயோ
டிருந்து வருந்துவர்முன் னெய்தியநோய் தீர்க்கு
மருந்துதிரு வாரூர் மருந்து. (௬௫)

குவிகைசிரங் கொண்டடியார் கூத்தாட முத்துச்
சிவிகை கவிகைதிருச் சின்னம் - புவிபுகழ
வாளுடைய பிள்ளையாக கன்றருளிச் செய்மருந்தொண்
வாளுடைய வாரூர் மருந்து. (௬௬)

விற்கொண் டடித்த விசயற் கருண்மருந்து
கற்கொண்ட சாக்கியனார் கண்டமருந் - தற்கொள்
களமருந்து சோழன் கவிஞரம் பூண்ட
வளமருந் தாரூர் மருந்து. (௬௭)

சமரிற்கை தோற்றீக் கழுத்தரிகை பற்றித்
தமராய்த் தடுத்துவிடேற சத்த - மமர
வெழுப்பிவிடைக காட்சியன்பாக கீந்தமருந் தென்றும்
வழுத்தவிாந்த வாரூா மருந்து. (சாஅ)

கறபுணையாற சொறகோன் கடலேறச் செய்மருநது
மற்புனைபூ தத்தான் மலைபோன்ற - நெற்குவையை
வீடுமறு கெங்குநிறை வித்தமருந தொண்சிகரி
மாடுபுனை யாரூா மருநது. (சாகூ)

வீயாச் சிரகிரியின் மேயசெட்டிப் பெண்ணுக்கு
மாயாத் தயில மருந்தேந்தித் - தாயாய்வந்
தனபாய் மருத்துவஞ்செ யான்றமருந் தொண்கடலசூழ்
மன்பாாசொ லாரூா மருநது. (எ0)

சன்றிழந்த வாவிரக்கங் கண்டுதே ரூர்ந்தசேய்க
கன்றுயிா தந்தமருந் தாரூராக - கொன்று
மருச்சனைபாட் டென்ற வருமருநது சோலை
மருச்செறிதென் னூரா மருந்து. (எக)

காலன்சன முகக் கறக்கும் பசுவாகி
யேல வுலாய வெழின்மருந்து - சால
விறுகு மனத்தேற் கிரங்குமருந் தந்தோர்
மறுகுதிக ழாரூர் மருந்து. (எஉ)

கலத்திற் படைத்த கறிமீண்டு சேயாய்
நலத்தின்வரச் செய்மருந்து நந்தன் - குலத்தி

லுயர்மறையோ னுப்த்தா னுறச்செய் மருந்து
மயாவகற்று மாரூர் மருநது. (எக)

காட்டமறைக காட்டிற் கதவுதிறக் கும்மருநது
மீட்டக் கதவடைக்கு மெய்ம்மருந்து - வேட்ட
வதிபத்தா பொன்மீன்பெற் றுண்டமருந் தன்பா
வதியுற்ற வாரூா மருந்து. (எச)

பொய்யா மருந்து புனல்கூ டியமருந்து
மெய்யாக கொளியாய் மிளிமருந்து - மையா
வுளத்தாக கிருளா யொளிக்குமருந் தின்ப
வளத்தாலா ராரூா மருந்து. (எரு)

அண்டி வணங்கா வமணாகுரு டாபோடத்
தண்டியடி கட்கிருகண் டநதமருந் - துண்டிவிரா
நஞ்சமுதா னாவரசா னன்சருந்தச் செய்மருந்து
மஞ்சுதிக ழாரூா மருந்து. (எசு)

சொல்லரசை மாவேழஞ் சூழ்ந்துவணங் கிச்சமணர்க
கொலலத் திருபபு குணமருந்து - பலலவனைச்
சைவக் கரையேற்று தண்மருந்தன் பர்க்குமல
மைவிலகக மாரூா மருந்து. (எஎ)

நீறறைவா கீசருக்கு நீர்வாவி யாயிளந்தென்
காறறு யமுத கலைமதியாய்த் - தோற்றிச்
சுகஞ்செயயச் செய்மருந்து தொன்மறையோர் கூடி
மகஞ்செய்யு மாரூர் மருந்து. (எஅ)

திருக்கயிலைக் காட்சிதரி சிக்கக்கை காண்மார்
புருக்கலையச் சென்றவப்பர்க் குந்தத் - திருக்காட்சி
யையயாற் றருளுமருந் தங்களத்தில வெய்யகடு
வையயாற்று மாரூர் மருந்து. (எசு)

தந்தைக் கொலைசிவ தர்மமாச் சேய்ஞலூர்
வந்தபிள்ளை யார்க்கருளு மாமருந்து - சுந்தரர்முன்
னாற்றினிலிட் டுக்குளத்தி லாய்ந்தெடுத்த பொன்சேயான்
மாற்றுரைத்த வாரூர் மருந்து. (அ0)

சேரர் பெருமானார் செய்ம்மும் மணிக்கோவை
யேரமையக கேட்டமருந் தேயர்கோன் - சீர்வயிற்றுச்
சூலைநம்பி போய்த்தீர்ககச் சொன்மருந்து செங்கழுநீர்
மாலைபுனை யாரூர் மருந்து. (அக)

சீத்தி மதுரையிற்கை தேய்த்ததிருத் தொண்டரா
மூர்த்திக் கரசளித்த முன்மருந்து - பூர்த்திநமி
நந்திநீ ரால்விளக்கு நன்கெரிக்கச் செயமருந்து
வந்துவிண்கு மாரூர் மருந்து. (அஉ)

மாமணத்தின் மானக்கஞ் சாறனார் மாமகளார்
பூமணக்கும் கூந்தனம் பூணூலுக - காமென்
றரிந்து வளர் வித்த வரு மருந்து நாகம்
வரிந்தவரை யாரூர் மருந்து. (அங)

அன்புருவாங் காரைக்கா லம்மைமதிரு வந்தாதி
யின்புறக் கேட்ட மருந் தேர்முரு - கன்பூண்டி

பிறகவர்ந்த பொன்னம்பி பேத்தத் தருமருந்து
மற்கலந்த வாரூர் மருந்து. (௮௪)

உதியர்பிரான் வன்றொண்ட ரோடையா ரேக
நதிவிலகி மேற்புறத்தி னண்ணி - வதியுதவ
வாற்றுமருந் தொண்மன்றத் தாடுமருந் தென்றவலை
மாற்றுமருந் தாரூர் மருந்து. (௮௫)

தாலி கொடுத்தெதிரோ சாருங் கிலியத்தை
யேலக் கொடுத்தூப மிட்டுவந்த - நூலணிந்த
மார்பனையிற் சென்றுண்க மாவெற்ற னைமருந்து
வாரபுகழா ராரூர் மருந்து. (௮௬)

கழுத்திற் கயிறு கலையனார் பூண்டன்
றிழுத்தபினோ நின்றமருந் தியாரும் - வழுத்தக்க
குருந்தடியில் வாதவூர்க் கோமானை யாண்ட
மருந்துதிரு வாரூர் மருந்து. (௮௭)

ஆரூர்ப் பிறந்தார்க ளாருநமி நந்திநஞ்
சீரூர் கணங்களெனச் செப்புமருந் - தேரூரு
மரண்பனை காய்க்க வருளுமருந் தாரருள்சோ
மாண்பகலா வாரூர் மருந்து. (௮௮)

வேனில்வெப் பந்தவிர வெள்ளியமுத் தின்பந்தா
மேனிழற்ற வேணுபுர வேந்தர்க்குத் - தானளித்த
தண்மருந்து சங்கத் தமிழ்ப்புலவ ரோடாய்ந்த
வண்மருந் தாரூர் மருந்து. (௮௯)

நாகைக்கா ரோணத்தி னாவலூர் நம்பிக்கு
வாகைப் புரவிமணி மாலைமுத - லோகையொடு
தந்த மருந்தினைச் சாரமாறா முன்பசித்து
வந்தமருந் தாரூர் மருந்து. (௬0)

இந்தனந் தாங்கி யெழின்மதுரை மாமறுகில்
வந்து விலைபகர்ந்த மாமருந்து - சந்தமலி
போதந் தருமருந்து பூவனத்திற் சென்றிரந்த
வாதஞ்செ யாரூர் மருந்து. (௬௧)

ஆறு சுவையமுத மப்பினை முகமனொடு
நாறு குழற்கௌரி நனைகூட்ட - வீறுபெற
வுண்ட முதியமருந் தொண்டர்களை யாயமுறவா
மண்டமுகா ராரூர் மருந்து. (௬௨)

மலையந் துவசனபொன் மாலையோ டாட
வலையந்தி யோரோ முறைமுத்த - நிலைமருந்
தட்டசித்தி மாத ருவாக கருண்மருந்து
மட்டவிழ்தா ராரூர் மருந்து. (௬௩)

சிங்கத்தைச் சிம்புளாய்ச் செற்றமருந் தண்டருட
லங்கத்தைப் பூண்ட வருமருந்து - திங்களொடு
கங்கை யணிமருந்து காமா மலையயந்த
மங்கைசே ராரூர் மருந்து. (௬௪)

மாமை திகழ்மருந்து மாலைத் துழாயணிந்த
வாமை முதுகோ டணிமருந்து - காமனுயி

ரஸ்ப்ரதி வேண்ட வருண்மருந்து வீதிதொறு
மஸ்றுதிக மூரூா மருந்து. (சுரு)

மழுவா லெறிபந்தா மாய்த்தகைம்மாப் பாக
ரெழுமா றருளுமருந் தின்பின - வழுவா
வலாசிாச சிவகாமி யாண்டாசூடு கூடை
மலாசேர்ந்த வாரூா மருந்து. (சுசா)

சிலந்தி யரசாயகசோச் செயகண்ணு னொறு
நலந்திகழுத தோன்றியனபு நண்ணரி - வலந்திகழ
வாகசூநளி மேவி யமரு மருமருந்து
மாகசுவிணு ராரூா மருந்து. (சுள)

நலமபொலியுந் சோராயிரா னனகுலசாலப பாதச
சிலமபொலிகேட் பிதகருளின செலவ - வலமபொலிநன்
றுவலூாக கோலணபு நலகுருநருந் தமபொழிலவாப
மாவலூா ராரூா மருந்து (சுஅ)

திருமருநற செட்டிவிடந் தீாந்துயயச் செய்த
வருமருந்து வேணுபுரத தனபாக - கிருந்திதே
தோடா களைசேர வுந்துமருந் தமபொலசெய
மாடமலி யாரூா மருந்து. (சுசு)

திருமருந்து வேதச் சிரமருந்தா னநதந்
தருமருந்தென் கண்ணைப் தவிாககு - மருமருந்து
தேமருந்து நேருந தியாகேச னொனுமபோ
மாமருந் தாரூா மருந்து. (எ00)

பயன்.

மருந்துமருந் தென்றுகவி மாலை புனைந்தேன்
வருந்துமெளி யேனின்னல் மாற்றி - யிருந்தன்
பெருமா புகழ்பாடும் பேராத செல்வம்
தருமாரூர் வாழ்தியாகேசன். (௱௦௯)

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

திருந்துபுக ழாரூரத் தியாகேசன் றன்னை
மருந்துமருந் தென்றினிது வாழ்த்திப் - பொருந்துதுதி
சாற்றுந் தியாகரா சக்கவிஞற் கியாமெல்லா
மாற் [illegible]

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL PANDIT.

திருவாரூர் மருந்து வெண்பாமாலை
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தியாகேசன் றிருவடிவாழ்க.

சிவமயம்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	கO	நம்மா	நம்பா
சா	எ	வெய்ந்த	வெந்த
கO	கரு	சூன்கண்	சூன்றுகண்
கஅ	ககூ	கைலா	கயிலா
உச	கஈ	வான்	வாள்
ஙO	சா	பணி	பிணி